## சுருக்கம்

பள்ளிக் கல்வி- இலவச சைக்கிள் வழங்கும் திட்டம்- அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் சுயநிதி அடிப்படையில் நடைபெறும் வகுப்புகளில் 11, 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ/மாணவியருக்கு இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தை ஏனைய வகுப்பைச் சார்ந்த மாணவ /மாணவியருக்கும் விரிவுபடுத்தி - ஆணை வெளியிடப்பட்டது - 2006-2007ம் ஆண்டிலும் தொடர்ந்து வரும் ஆண்டுகளிலும் நடைமுறைப்படுத்தல் - ஆணைகள் - வெளியிடப்படுகின்றன.

---

<u>பள்ளிக் கல்வித் (க்யு.1) துறை</u>

<u>அரசாணை (நிலை) எண்.147</u> <u>நாள் 28.08.2006</u>

<u>படிக்கப்பட்டது</u>

1. அரசாணை (நிலை) எண்.45 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நாள் 27.7.2001.
2. அரசாணை (நிலை) எண்.73, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை நாள் 25.7.2005.
3. அரசாணை (நிலை) எண். 75, பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நலத்துறை நாள் 26.7.2005.
4. அரசாணை (நிலை) எண்.123 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நாள் 4.8.2005.
5. அரசாணை (நிலை) எண் 81, பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை நாள் 8.8.2005.
6. அரசாணை (நிலை) எண்.177, பள்ளிக் கல்வி (க்யு.1) துறை நாள் 13.9.2005

----

<u>ஆணை:-</u>

மேலே 1 முதல் 5 வரை படிக்கப்பட்ட அரசாணைகளில் தமிழகத்தில் மேல்நிலைக்கல்வி பயிலுகின்ற ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட (ம) சீர்மரபினைச் சார்ந்த மாணவ / மாணவியருக்கு இலவச மிதிவண்டிகள் வழங்க அரசால் ஆணையிடப்பட்டது. மேலே 6ல் படிக்கப்பட்ட அரசாணையில் அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் (ம) அரசு நிதி பெறும் பள்ளிகளில் சுயநிதி அடிப்படையில் நடைபெறும் வகுப்புகள் ஆகியவற்றில் 11 மற்றும் 12ஆம் வகுப்பில் பயிலும் ஏனைய வகுப்புகளைச் சார்ந்த மாணவ / மாணவியருக்கும் இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தை விரிவுபடுத்தி அரசு ஆணை வெளியிட்டது. இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தை தொடர்ந்து நிறைவேற்றும் என்று 24.05.2006 அன்று ஆளுநர் உரையில் அறிவிப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஏனைய வகுப்புகளைச் சார்ந்த மாணவ மாணவியருக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கும் இத்திட்டம் நடப்பு கல்வி ஆண்டிலும் (2006-2007) தொடர்ந்து செயல்படுத்த அரசு ஆணையிடுகிறது.

2) இதர மாணவ, மாணவியருக்கு இலவச மிதிவண்டிகள் வழங்குவதற்கு மேலே 6ல் படிக்கப்பட்ட ஆணையில் வெளியிடப்பட்ட வழிமுறைகளைப் பின்பற்றி, இந்த ஆண்டும் (2006-07) இனி வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து இலவச மிதிவண்டிகள் வழங்க நடவடிக்கை எடுக்க பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

3) இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.44108/கல்வி.II/06 நாள் 10.8.2006 -ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம. குற்றாலிங்கம்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6
இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நலன்,சென்னை-5
சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சீர்மரபினர் சென்னை-5
ஆணையர்,தொழில் மற்றும் வர்த்தகத்துறை, சென்னை-5
கருவூலக் கணக்கு ஆணையர், சென்னை-35
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
மாநிலக் கணக்காய்வு தலைவர், சென்னை-18/35/6
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை - 5 / 9 /35

**நகல்**
பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை-9
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-9
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, சென்னை - 9
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை- 9
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அலுவலம்,சென்னை-9
நிதித்துறை, சென்னை-9 (கல்வி -II)
பள்ளிக் கல்வி (பட்ஜெட்) துறை, சென்னை-9

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.